## உங்கள் வியாபாரத்துக்கு இது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?

முறையற்ற கழிவு முகாமைத்துவம் என்பது இலங்கையின் சுற்றுலாப் பகுதி எனும் தோற்றப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதுடன் வனஜீவராசிகள் மற்றும் இயற்கை மூலங்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

கழிவுகளின் ஆரம்ப மூலத்தை கையாள்வது என்பது கழிவாக மாறிய பின்னர் அதனை நிர்வகிக்கும் செலவை விட சிக்கனமானது. கழிவு உருவாக்கப்பட்டதும், அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கு வளங்களில் வியாபாரங்களுக்கு முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

வினைத்திறனான கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் என்பது உங்கள் வியாபாரத்தை, வாடிக்கையாளர்கள் எதிர்பார்ப்புகள் மற்றும் தேசிய கழிவு ஒழுங்குபடுத்தல்கள் போன்றவற்றுடன் இணையச் செய்யும்.

பாரியளவிலான நிறுவனங்கள், தமது வியாபார பங்காளர்களிடம் அடிக்கடி சூழல் முகாமைத்துவ கட்டமைப்பு (EMS) ஒன்றை கொண்டிருப்பதை கோருவதுடன், அதில் பொறுப்பு வாய்ந்த கழிவு முகாமைத்துவம் மற்றும் அழிப்பு செயன்முறைகள் அடங்கியிருக்கும்.

## உங்கள் கழிவை முகாமைத்துவம் செய்வதற்கு நீங்கள் மேற்கொள்ளக்கூடிய நீண்ட கால செயற்பாடுகள்

- 5Rகளை பின்பற்றல்–நிராகரித்தல் (Refuse), குறைத்தல் (Reduce), மீள பயன்படுத்தல் (Reuse), மீள்சுழற்சி செய்தல் (Recycle), மீளநோக்கத்துக்குட்படுத்தல் (Repurpose).
- உள்நாட்டு சம்மேளனங்களுடன் ஈடுபாட்டை பேணி நிலைபேறான கழிவு முகாமைத்துவ தீர்வுகளை உங்கள் சமூகத்திலும் சூழலிலும் ஊக்குவித்தல்.
- கழிவை கையாளல் மற்றும் முறையாக அழித்தல் போன்றவற்றுக்கு தீர்வுகளை கட்டியெழுப்புவதற்கு உள்ளூராட்சி சபைகள் மற்றும் சமூகத்தாருடன் இணைந்து பணியாற்றல்.
- உணவு விரயத்தை தவிர்க்கக்கூடிய மெனியுக்கள் மற்றும் அளவுகளை உருவாக்கல் மற்றும் உள்நாட்டில் பெறப்பட்ட மூலப்பொருட்களை உள்ளடக்கல்.

**விருந்தோம்பல் துறையில், உணவை முன்கூட்டியே தயார்ப்படுத்தி வைத்திருப்பது என்பது, ஒட்டுமொத்த உணவுக்கான செலவிடப்படும் தொகையில் சுமார் 20% விரயமாக அமைய ஏதுவாகும். பழுதடைதல், அளவுக்கதிகமான தயாரிப்பு மற்றும் சமையலறை தவறுகள் போன்ற காரணிகளால் இந்த விரயம் ஏற்படுகின்றது.**

### மேலும் அறிந்து கொள்வதற்கு

List of waste collectors and recyclers in Sri Lanka

Licensed Collectors of Electronic Waste

Managing and Reducing Waste: A Guide for Commercial Buildings

**நீங்கள் இல்லை என்றால், யார்?இன்றே செயல்படுங்கள் 👉 நிலைத்தன்மையை சிந்தியுங்கள் 🌎**


USAID Indo-Pacific Opportunity Project (IPOP)
International Development Group LLC

56/6A Horton Place
Colombo 7, Sri Lanka
Tel: 94-112697052


USAID FROM THE AMERICAN PEOPLE

# கழிவை முகாமைத்துவம் செய்ய நீங்கள் என்ன செய்யலாம்



# கழிவுகளை நிர்வகிக்க என்ன செய்யலாம்

USAID
FROM THE AMERICAN PEOPLE

1. நல்ல திடக்கழிவு மேலாண்மை நடைமுறைகளில் ஊழியர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈடுபடுத்தவும்

2. உங்கள் தோட்டத்திற்கு இயற்கையான கரிம உரங்களை உற்பத்தி செய்ய உரத் தொட்டியை நிறுவவும்

3. அச்சிடுவதைக் குறைத்து, அச்சிடும் போது தாளின் இருபக்கமும் அச்சிடவும். புதிய கார்ட்ரிட்ஜ்களை (new cartridges) வாங்குவதற்கு பதிலாக கார்ட்ரிட்ஜ்களை மீள நிரப்பவும் (refill cartridges )

4. உங்கள் பைகள் மற்றும் பேக்கேஜிங் (Packaging) பொருட்களை மீண்டும் பயன்படுத்தவும்

5. ஒருமுறை பயன்படுத்தும் பொருட்களை மீண்டும் பயன்படுத்தக்கூடிய அல்லது இயற்கையாகவே சிதையக்கூடிய பொருட்களுக்கு மாற்றவும்

6. உங்கள் விநியோகச் சங்கிலியை (supply chain) நிலையானதாக ஆக்குங்கள். உள்ளூர் மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களை வாங்கவும்

7. காகிதம், அட்டை, கண்ணாடி, சமையல் எண்ணெய், தகரம் மற்றும் மின்-கழிவு போன்ற மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை பொருத்தமான மறுசுழற்சி மையத்திற்கு அனுப்பவும்




தமது வியாபார நடவடிக்கைகளில் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களின் பாவனையை நீக்கிய பின்னர், இலங்கையில் ஒரு சிறிய சாகச சுற்றுலா வர்த்தகம் சுமார் 35,000 பிளாஸ்டிக் போத்தல்கள் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதிலிருந்து தடுத்துள்ளது. இது மாதத்திற்கு சுமார் 145 பிளாஸ்டிக் போத்தல்களுக்கு சமம்.

“ நாம் திடக்கழிவுகளைக் குறைத்து, நிலைத்தன்மைக்கு பங்களிப்பதற்காக எமது கரிமக் கழிவுகளை பன்றி வளர்ப்புக்குத் திருப்புவதாக திடமான முடிவை எடுத்துள்ளோம். இது கழிவு மேலாண்மையை நமக்கு எளிதாக்குவது மட்டுமல்லாமல், இது ஒரு பலனளிக்கும் முயற்சியும் ஆகும். ”

~ இலங்கையில் ஒரு சிறு வணிகம்